மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

# திருவள்ளுவர் பார்வையில் பெண்கள்

## Women From Thiruvalluvar's Point of View

நவீன் கணேசன்/ Navin G Ganeson[1]
மனோன்மணி தேவி அண்ணாமலை/ Manonmani Devi M.A.R Annamalai[2]
[1]M. Ed Scholar, Faculty of Languages and Communication, Sultan Idris Education University
[2] Associate Professor, Faculty of Languages and Communication, Sultan Idris Education University
Corresponding Email: navingganeson@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் திருக்குறள் முக்கிய நூலாகக் கருதப்படுகின்றது. மனிதர்கள் தங்கள் அகவாழ்வில் முகமாகக் கூடி வாழவும், புற வாழ்விலும் இன்பமுடனும், இசைவுடனும், நலமுடனும் வாழவும் தேவையான அடிப்படைப் பண்புகளைத் திருக்குறள் எடுத்தியம்புகிறது. இத்தகைய சிறப்புடைய நூலை எழுதியவர் திருவள்ளுவர் ஆவார். பெண்கள் பண்டைய காலம் தொடங்கி இன்றைய தற்காலம் வரை போற்றப்பட்டு வருகின்றனர். ஆக, திருக்குறளை எழுதிய திருவள்ளுவரின் பார்வையில் பெண்கள் எவ்வாறு இருந்துள்ளனர் என்பதைக் கண்டறிந்து விளக்குவதே, இவ்வாய்வின் முக்கிய நோக்கமாகும். இவ்வாய்வுப் பண்புசார் அணுகுமுறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வுக்கான தரவுகள் யாவும் நூலக ஆய்வு அணுகுமுறையில் கையாளப்பட்டுள்ளது. இவ்வகை, நூலக ஆய்விற்கு ஏற்புடைய நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள் பயன்படுத்தி விளக்கவியல் அணுகுமுறையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆராயப்பட்ட, தரவுகளை ஆய்வு நோக்கத்திற்கு ஏற்ப வகைபடுத்தி, பத்தி (Text analysis) முறையில் பகுத்தாயப்பட்டுள்ளது.

**கருச்சொற்கள்:** திருவள்ளுவர், பெண்கள், பார்வை, திருக்குறள்

**Abstract**

Thirukkural is considered to be the most important book among the Pathinen Keezhkanakku Books. Thirukkural embodies the basic qualities necessary for human beings to live harmoniously in their inner lives and to live with pleasure, harmony and well-being in their outer lives. Thiruvalluvar is the author of such a special book. Women have been admired since ancient times till today. Thus, the main objective of this study is to find out and explain how women were from the point of view of Tiruvalluvar written by Thirukkural. This review has been carried out in qualitative approach. All the data for this review were handled in a library approach. In this way, this research has been carried out in a descriptive approach using books and research articles suitable for library research. The researched data has been classified according to the purpose of the study and analyzed in the text analysis method.

**Keywords:** Tiruvalluvar, women, view, Thirukkural

## முன்னுரை

திருக்குறள் என்பது இன்றும் உலகளவில் போற்றப்படும் புகழ்பெற்ற ஒரு தமிழ் இலக்கியமாகும். திருக்குறள் நாடு, மொழி, இனம், சமயம் கடந்து, உலக மக்கள் அனைவராலும் ஏற்றுக்கொள்ள கூடிய நூலாக உள்ளது. திருக்குறள் கருத்துகள் அறநெறிகள், வாழ்வியல் நெறிகள், அரசியல் நெறிகள், ஒழுக்க நெறிகள், பொருளியல் நெறிகள், களவியல் நெறிகள், கற்பியல் நெறிகள் என்று வரிசைப்படுத்தக் கூடியவையாய் அமைந்திருகின்றன. திருக்குறளின் பெருமையை முதன்முதலில் உலகறியச் செய்தவர் வீரமாமுனிவர். அவரைத் தொடர்ந்து, பன்னாட்டு அறிஞர்களும் திருக்குறளை மொழி பெயர்த்து உலகறியச் செய்தனர் (Navin, 2023).

தமிழ் இலக்கியத்தில் பெண்களைப் பற்றி பேசப்படாத இடமில்லை. பெண்ணின் அழகையோ, அவளின் பண்பையோ பேசாத இலக்கியங்களும் இல்லை. காலம் தொட்டு இன்றுவரை பெண்மையின் சிறப்பினை இலக்கியம் படைப்போர் எடுத்துரைத்துக் கொண்டே இருக்கின்றனர். அவ்வகையில், உலகப் பொதுமறையான திருக்குறளும் பெண்களைப் பற்றி பேசியுள்ளது (Sethuraman, 2022). திருக்குறளை எழுதிய திருவள்ளுவரின் பார்வையில் பெண்கள் எப்படி வகுக்கப்படுள்ளனர் என்று ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## ஆய்வு நெறிமுறை

இவ்வாய்வானது பண்புசார் அணுகுமுறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வுக்கான தரவுகள் யாவும் நூலக ஆய்வு அணுகுமுறையில் எடுத்தாளப்பட்டுள்ளன. இந்த நூலக ஆய்விற்கு ஏற்ற நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள் போன்றவற்றைப் பயன்படுத்தி விளக்கமுறை அணுகுமுறையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வு முழுமையாக நூலக ஆய்வு அணுகுமுறையால் மேற்கொள்ளப்பட்டுள்ளதால், தேவைக்கான தரவுகளை முதலில் நூல்கள், ஆய்வுக் கட்டுரைகளின் வழி சேகரிக்கப்பட்டது. திருக்குறள் விளக்கவுரை நூல்களிலிலிருந்து ஆய்வுக்கான தரவுகள் சேகரிக்கப்படும். பின் சேகரித்த தரவுகளை வாசித்து மதிப்பீடு செய்து, தேவையான தகவல்களை மட்டும் அடையாளங்கண்டு, திருக்குறளில் காணப்படும் பெண்கள் சார்ந்த பதிவுகள் கண்டறிந்து விளக்கமுறை அடிப்படையில் அத்தரவுகள் பகுத்தாயப்பட்டு ஆய்வுக் கண்டுபிடிப்புப் படைக்கப்படும். இவ்வாய்வில் குறிப்பாகத் திருக்குறளின் இன்பத்துப்பால் பாடல்கள் ஆய்விற்கு உட்படுத்தப்படும்.

## தரவுப் பகுப்பாய்வு

### பெண்ணின் துணிச்சல்

அக்காலத்தில் பெண்கள் ஆண்களுக்கு அடிமையாக இருந்ததாகப் பல கருத்துகள் நிலவுகின்றன. பெண்கள் குனிந்த தலை நிமிராமல் ஆண்களுக்கு அடிப்பணிந்து வாழுதல்

அவசியம் என்ற விதியிருந்தது. அவ்விதியைத் திருவள்ளுவர் கீழ்க்காணும் குறள் வழி உடைத்தெறிகின்றார்.

‘நோக்கினாள் நோக்கெதிர் நோக்குதல் தாக்கணங்கு
தானைக்கொண் டன்ன துடைத்து.’ (குறள் 1082)

இக்குறளில் வள்ளுவர், தலைவி பார்க்கும் பார்வையானது தலைவனைத் தலைவி தாக்குவதோடு அவளோடு அவள் படைகளும் இணைந்து தாக்குவது போல இருந்தது எனத் தலைவியின் விழியை நோக்கிய தலைவனின் நிலைப்பாட்டைக் கூறுகின்றார். இதன்வழி, பெண்கள் துணிச்சலோடு ஆண்களைச் சரிசமமாகப் பார்க்கும் துணிச்சல் மிக்கவர்கள் என்று புலப்படுத்துகிறார் வள்ளுவர். திருவள்ளுவர் ஆண்களையும் பெண்களையும் ஒரே கோட்டில் நிற்க வைத்துள்ளார் என இதன் வழி அறியலாம்.

**பெண்ணின் நாணம்**

பெண்ணின் துணிச்சலை வெளிப்படுத்திய வள்ளுவர் அதேநேரத்தில், பெண்ணின் நாணத்தையும் தமது குறட்பாவில் குறிபிட்டுள்ளார். நாணம் பெண்களுக்குரிய அகப்பண்புகளில் ஒன்றாகும். இப்பண்பைத் திருவள்ளுவர் குறள் 1094இல் விளக்குகிறார்.

“யான்நோக்கும் காலை நிலன்நோக்கும் நோக்காக்கால்
தான்நோக்கி மெல்ல நகும்’ (குறள் 1094)

காதலுற்ற பெண், தலைவன் தன்னை நோக்கும் போது அவனைப் பார்க்காமல் நாணத்தில் நிலத்தைப் பார்ப்பாள். தலைவன் வேறு திசை நோக்கும் போது தலைவனை நோக்கி தன் மனத்தளவில் மகிழ்ந்து கொள்வாள். இக்குறளில் காதல் வசப்பட்ட பெண் நாண உணர்வில் தவிப்பதை உணர்த்துகிறார், வள்ளுவர்.

**பெண்ணின் உணர்வுத்திறன்**

பெண்கள் உணர்ச்சி வசப்படுபவர்கள் என்ற கருத்தினை நாம் அறிந்ததே. ஆனால், திருவள்ளுவர் பெண்கள் உணர்வுத் திறன்கள் மிக்கவர்கள் என்று புணர்ச்சி மகிழ்தல் அதிகாரத்தில் கூறியுள்ளார். அதாவது, பெண்களுக்கு ஐம்புலனையும் அடக்கி ஆளும் ஆற்றல் உள்ளவர்கள் என்று திருவள்ளுவர் பெண்களை உயர்த்துகிறார். சான்றாக,

‘கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்
ஒண்தொடி கண்ணே உள’ (குறள் 1101)

என்ற குறள் பெண்ணின் உணர்வுத் திறனைக் கூறுகின்றது. கண்டு மகிழவும், கேட்டு மகிழவும், தொட்டு மகிழவும், முகர்ந்துண்டு மகிழவுமான ஐம்புலன் திறன்களும் பெண்களிடம் மட்டுமே நிறைந்துள்ளன என்று இக்குறள் வாயிலாக வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார்.

**பெண்ணின் மென்மை**

அக்காலம் முதல் இக்காலம் வரை பெண்களைப் பூவோடு இணைத்துப் பாடாத புலவர்களே இல்லை எனலாம். அவ்வரிசையில் திருவள்ளுவரும் இடம்பெறுகிறார். திருவள்ளுவர் பெண்களின் மென்மையைப் பற்றி குறள் 1111இல் பேசியுள்ளார்.

> ‘நன்னீரை வாழி அனிச்சமே நின்னினும்
> மென்னீரள் யாம்வீழ் பவள்’ (குறள் 1111)

பூக்களில் மிகவும் மென்மையான பூ எதுவென்றால் அனிச்சம் பூ என்று சொல்லலாம். தலைவன் அவ்வகை பூவிடம் உன்னை விட என் தலைவி மென்மையானவள் என்று கூறுவதாக இக்குறள் அமைக்கப்படுள்ளது. அதாவது, பெண்ணின் மென்மையை வள்ளுவர் அனிச்சப் பூவோடு ஒப்பிட்டுப், பெண்கள் பூவைக் காட்டிலும் மென்மையானவர்கள் என்று நிறுவியுள்ளார்.

**பெண்ணின் அழகு**

பெண்களின் அழகை வருணித்துப் பாட்டெழுதாத பாவலர்கள் அரிது. அது போலவே பண்டைய காலத்திலேயே திருவள்ளுவரும் பெண்ணின் அழகைப் பற்றி குறள்களில் பாடியுள்ளார். சான்றாக,

> ‘மதியும் மடந்தை முகனும் அறியா
> பதியின் கலங்கிய மீன்’ (குறள் 1116)

என்ற குறளில் திருவள்ளுவர் பெண்ணின் முகவழகையும் வானத்தின் நிலவழகையும் ஒப்பிட்டுக் கூறியுள்ளார். வானத்தில் உள்ள விண்மீன்கள் தன்னருகே உள்ளே நிலவினைக் கண்டும் நிலத்தில் உள்ள தலைவியின் முகத்தைக் கண்டும் எது நிலவென அறியாமல் சிதறிக் கிடக்கின்றன என்பதாக இக்குறள் பொருள்படுகிறது. திருவள்ளுவர் நிலவைக் காட்டிலும் பெண்ணின் முக அழகும் அக அழகும் உயர்ந்தது என பெண்மையை உயர்த்தி கூறியுள்ளார்.

**பெண்ணின் காதல்**

தமிழில் பெரும்பாலான இலக்கியங்கள் பெண்ணின் காதல் மேன்மையை எடுத்துக் கூறுகின்றது. அதேபோல், திருவள்ளுவர் எழுதிய திருக்குறளும் பெண்களின் காதல் நிலையைக் குறித்துப் பாட தவறவில்லை. சான்றாக,

> ‘நெஞ்சத்தார் காத லவராக வெய்துண்டல்
> அஞ்சுதும் வேபாக் கறிந்து’ (குறள் 1128)

என்ற குறளில், தலைவி நெஞ்சத்தில் தலைவன் குடியிருப்பதால் தலைவி சூடான உணவுகளையோ நீரையோ அருந்துவதற்குத் தயக்கம் கொண்டு அஞ்சுகிறாள் என்று அறியமுடிகின்றது. அடுத்து,

> ‘உவந்துறைவர் உள்ளத்துள் என்றும் இகந்துறைவர்
> ஏதிலர் என்னும்இவ் வூர்’ (குறள் 1130)

என்ற குறள்வழி, தலைவி தன் தலைவனோடு உள்ளத்தில் சேர்ந்து வாழ்கின்றாள். ஆனால், இதை அறியாத ஊர் மக்கள் தலைவன் அன்பில்லாதவன் என்று தூற்றுகின்றனர் என்று தன் தலைவனை விட்டுக்கொடுக்காமல் ஊரினை நொந்து கொள்கிறாள் என்று தெரியவருகின்றது. ஆக, பெண் தன் காதலையும் காதலனையும் எந்நிலையிலும் விட்டுக்கொடுக்காத உன்னத பண்பே பெண்ணின் காதல் மேன்மையைக் கூறுகின்றது.

**பெண்ணின் இல்லற மாண்பு**

ஒரு பெண்ணின் இல்லறமே நல்ல குமுகாயத்திற்கு அடிப்படையாக இருக்கின்றது. ஒரு பெண் இல்லறத்தைச் சிறப்பாக நடத்தி வந்தால் அந்த இயற்கையே அவளுக்குக் கட்டுப்படும் என்கிறார், திருவள்ளுவர். எடுத்துக்காட்டாக,

> ‘தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
> பெய்யெனப் பெய்யும் மழை’ (குறள் 55)

என்ற குறள், எந்தவொரு பெண்ணும் கடவுளையே வணங்காவிடினும் தன் கணவனுடன் அன்புடனும் சக மரியாதையுடனும் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையுடனும் வாழ்ந்து வந்தால், அவள் சொன்ன மறுகணமே வான்மழை பெய்துவிடும். இல்லறத்தை முறையாக நடத்தி வந்தால் இயற்கை பெண்களுக்கு வழிவிடுகின்றது. அடுத்து,

> ‘தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
> சொற்காத்துச் சோர்விலாள் பெண்’ (குறள் 56)

உடலாலும் உள்ளத்தாலும் தன்னைக் காத்து, தன் கணவனின் நலன்களில் கவனம் வைத்து, குடும்பத்திற்கு நலம் தரும் புகழைக் காத்து, அறத்தைக் கடைப்பிடிப்பதில் சோர்வடையாமல் இருப்பவளே மனைவி என்று மேற்காணும் குறள் வலியுறுத்துகின்றது. பெண்கள் என்றாலே சோர்வு அற்றவர்கள் என்றும் அவர்களே குடும்பத்தைக் காக்கும் திறன் கொண்டவர்கள் என்றும் வள்ளுவர் கூறுகின்றார். ஆக, இந்த இரண்டு குறளும் பெண்ணின் இல்லற மாண்பைக் காட்டுவதாக அமைந்துள்ளது.

**பெண்ணின் தாய்மை நிலை**

'எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே அவர் நல்லவர் ஆவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே' என்ற பாடல் வரியை நாம் அறிந்ததுதான். ஒரு பெண் தன் மகனை ஊராரும் உலகமும் போற்றும் வகையில் வளர்ப்பவள் என்றும் திருவள்ளுவர் குறளில் தாய்மையின் நிலையைப் பற்றி விவரித்துள்ளார். இதை,

'ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்' (குறள் 69)

எனும் குறளின் வழி அறியலாம். நற்பண்பு மிக்கப் பிள்ளைகளை வளர்ப்பதில் தாயே முதன்மைப் பங்கு வகுக்கின்றாள் என்றும் அன்னை வளர்ப்பினிலே பிள்ளைகள் உயர்ந்த நிலைக்குச் செல்லமுடியும் என்றும் திருவள்ளுவர் இக்குறளில் கூறியுள்ளார்.

**நிறைவுரை**

திருவள்ளுவரின் பார்வையில் பெண்களை எட்டு விதமாக வகுக்கமுடிகின்றது என்பதைக் கண்டறிந்து மேலோட்டமாக இங்கு விளக்கப்படுள்ளது. திருக்குறளில் பெண்கள் உயர்வாகப் போற்றப்படுகின்றனர். காதலியாக, மனைவியாக, குடும்பத் தலைவியாக, தாயாக என எல்லா நிலையிலும் பெண்களை முன் நிறுத்தித் திருவள்ளுவர் தனது பார்வையையும் எண்ணத்தையும் குறள்களில் வடித்துள்ளார். திருக்குறளின் வழி அன்று தொட்டு இன்று வரை, எழுதப்பட்ட தமிழ் இலக்கியங்களும் இன்றைய படைப்புகளும் பெண்களுக்கு முதலிடம் கொடுத்து வந்துள்ளன என்பதை நாம் உறுதியாகக் கூறலாம்.

## துணைநூற்பட்டியல்


Mariappan, K. (2012). Tirukkuṟaḷiṉ 133 atikāraṅkaḷukku virivāṉa viḷakkam. Chennai: Good Books Publication.

Navin, G. S. (2023). The usage of Oṭu, Ōṭu Urupu found in Thirukkural. Indian Journal of Tamil, 13-19.

Sethuraman, C. (2022). Muthukamalam Online Magazine. Muthukamalam: source: http://www.muthukamalam.com/essay/literature/p76.html

Singaravelu, S. (2014). Tirukkuṟaḷ (trilingual). Kuala Lumpur: Uma Publications.

Subbarayan, R., Jayakumar, T. (2021). Thirukkuralin Arivusar Nokkum Pokkum, International Research Journal of Tamil, 3(S-1), 188-192. https://doi.org/10.34256/irjt21s131